අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கத்தோலிக்க திருமறை

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்

**கல்வி அமைச்சு** | 14 | T | I, II

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| கத்தோலிக்கதிருமறை - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

**கத்தோலிக்க திருமறை- I**

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

## பகுதி 1

பொருத்தமான விடையை தெரிவுசெய்க.

1. எழுத்து வடிவம் பெற்ற இறைவெளிப்பாடு
   (1)தேம்பாவணி (2)திருவிவிலியம் (3)இயேசுகாவியம் (4)மங்களகீதம்

2. மெல்கிசதேக் என்பவர்..................ஆவார்
   (1)அரசன் (2)ஆயன் (3)குரு (4)இறைவாக்கினர்

3. இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறிக்கும் சொல்
   (1)லிட்டர்ஜியா (2)பரூசியா (3)எர்கோன் (4)லாஓஸ்

4. “ஜோர்ச் மாரியோ பர்காலியோ” என்ற இயற்பெயரைக் கொண்ட திருத்தந்தை
   (1)பிரான்சிஸ் (2)2ம் யோன்பவுல் (3)9ம் பயஸ் (4)6ம் சின்னப்பர்

5. “இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்துவிட மாட்டேன்” என இயேசுவுக்கு வாக்குறுதி கொடுத்த புனிதை
   (1)அன்னை திரேசா (2)அக்னெஸ்
   (3)அவிலா திரேசா (4)மரிய கொறற்றி

6. வெளிப்பாட்டு இலக்கியத்தில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே போராட்டம் இருப்பதை குறிக்கும் சொல்
   (1)இறுதிக்காலம் (2)அரக்கப்பாம்பு
   (3)இரு தன்மைகள் (4)அடையாளங்கள்

7. நாசா நிறுவனம் இயேசுவின் இரத்த மாதிரியை ஆய்வு செய்ய ரியூரின் நகரில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பொருள்
   (1) இயேசுவின் சிலுவை (2)இயேசுவின் முள்முடி
   (3)இயேசுவின் பாதணி (4)இயேசுவின் திருத்துகில்

8. இயேசுவின் சீடர் ஒருவரால் காது துண்டிக்கப்பட்ட "மால்குஸ்"என்பவர் யார்?
(1)உரோமைய படைவீரன் (2)தலமைகுருவின் பணியாள்
(3)பிலாத்துவின் காவலாளி (3)தீவிரவாதிகளில் ஒருவன்

9. புனித பவுல் தனது மூன்று பயணங்களையும் ஆரம்பித்த இடம் எது?
(1)பிசிதிய அந்தியோக்கியா (2)கப்பதோக்கியா
(3)இக்கோனியா (4)சீரிய அந்தியோக்கியா

10. கிறிஸ்தவர்கள் சிலுவை அடையாளம் வரைவது
(1)துன்ப சந்தர்ப்பத்திலும்பலப்படுத்தும்
(2)கிறிஸ்தவர் என்பதை வெளிப்படுத்தும்
(3)மனதை கட்டுப்படுத்தும்
(4)எவ்வேளையிலும் வெற்றி கிட்டும்

பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு 11,12,ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
A-தமது நாட்டுக்கு செய்ய வேண்டிய சேவையை குறைவின்றி செய்தல்
B-மனச்சான்றின் படி வாக்குரிமையை பயன்படுத்தல்
C-ஊதியத்திற்கு அடிமையாகாமல் நேர்மையுடன் பணிபுரிதல்
D-நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாத்தல்

11. அரச அதிகாரிகளின் பொறுப்புக்களும் கடமைகளுமாக அமையும் கூற்றுக்கள்
(1)A,B (2)A,D (3)A,C (4)B,D

12. நாட்டு மக்களின் கடமைகளும் பொறுப்புக்களுமாக அமையும் கூற்றுக்கள்
(1)A,B (2)A,C (3)B,C (4)B,D

13. தூய ஆவியை பெற்றுக்கொண்ட சீடர்களில் ஏற்பட்ட மாற்றங்களில் பொருத்தமற்றது
(1)வெவ்வேறான மொழிகளில் பேசினர்
(2)பொருளாதாரத்தில் மேம்பட்டனர்
(3)வாழ்க்கையில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது
(4)இறைவார்த்தைக்கு சான்று பகர்ந்தனர்

14. கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செபிக்க பிரகடனப்படுத்தப்பட்ட வாரமாக அமைவது
(1) ஜனவரி 18-25 (2)ஜனவரி 17-24
(3) ஜனவரி 07-14 (4) ஜனவரி 10-17

15. கொரிந்திய சமூகம் நற்கருணை விருந்தில் கடைப்பிடிக்க தவறிய இரண்டு பண்புகள்
(1)அன்பு, அமைதி (2)அன்பு, நட்பு
(3)அன்பு, பகிர்வு (3)அன்பு, இரக்கம்

16. திருத்தூதர் காலத்தில் அளப்பரிய சேவையாற்றிய நபர்
(1)புனித பேதுரு (2) புனித ஸ்தேவான்
(3)புனித யாக்கோபு (4)புனித பவுல்

17. கூற்று:- "புனித யோசவாஸ் அடிகளார் தொழிலாளியாக வேடம் பூண்டு இலங்கையை வந்தடைந்தார்"
காரணம்:- கப்பலில் பணியாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(1)கூற்றும் காரணமும் சரி (2)கூற்று சரி காரணம் பிழை
(3)கூற்று சரி காரணம் பிழை (3)கூற்றும் காரணமும் பிழை

18. திருவழிபாட்டு காலத்தில் சிவப்பு நிறம் பயன்படுத்தும் நாட்கள்
(1) தூய ஆவியின் விழா, மறைசாட்சிகள் விழா
(2) தேவ அன்னையின் விழா, தூய ஆவியின் விழா
(3) திருக்காட்சித்திருவிழா, கிறிஸ்து அரசர் பெருவிழா
(4) மறைசாட்சிகள் விழா, தேவ அன்னையின் விழா

19. திருவெளிப்பாட்டின் பதில் எழுத்தாளராக முன்வைக்கப்பட்டுள்ள திருத்தூதர்
(1)யாக்கோபு (2)பவுல் (3)பேதுரு (4)யோவான்

20. பழைய ஏற்பாட்டு பலிகள் அனைத்தும்............ பலியினால் முழுமை அடைகிறது
(1)கிபயோன் (2)மோரியா (3)கல்வாரி (4)ஜெருசலேம்

21. லூக்கா நற்செய்தியின் மறுபெயர்களில் பொருத்தமற்றது
(1)அன்பின் நற்செய்தி (2)பெண்களின் நற்செய்தி
(3)பாடுகளின் நற்செய்தி (4)செபத்தின் நற்செய்தி

22. மனிதன் நன்மை செய்வதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டிய பண்புகள்
(1)புத்தி,சுதந்திரம் (2)சகோதரத்துவம்,சமத்துவம்
(3)விவேகம்,ஒற்றுமை (4)துணிவு, தற்காப்பு

23. இறையாட்சி என்பது
(1)சுதந்திரமாக வாழ்வது (2)தலைவர்களுக்கு பணிவது
(3)இறை விருப்பத்திற்கு பணிவது (4)கடமைகளை நிறைவேற்றுவது

24. தமது வீடுகளில் மணத்துறவை பின்பற்றி ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள்
(1)ஏகாந்திகள் (2)வனத்துப்பிதாக்கள் (3)குருக்கள் (4)தபோதனர்

25. திருப்புகழ் மாலைக்கு பதிலாக செபிக்கப்படும் செபமாக கருதப்படுவது
(1)சிலுவைப்பாதை (2)செபமாலை (3)இறைஇரக்கம் (4)அன்பியம்

26. செவ்விந்திய இனத்தை சேர்ந்த சியடைஸ் என்பவர் இயற்கை பற்றி கூறுவது
(1)நதிகள் நமது சகோதரர்களாகும் (2)இயற்கை எமது அன்னை
(3)இறைவா உமக்கே புகழ் (4)உயிர்காக்க பயிர் காப்போம்

27. பிறக்கும் முன்னே அழைப்பை பெற்றவர்
(1)எசாயா (2)எசேக்கியேல் (3)எரேமியா (4)ஓசேயா

28. "நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" என கூறும் திருமுகம்
(1)யோவான் (2) பேதுரு (3) பிலமோன் (4)யாக்கோபு

29. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது
(1)அதிமேன்மை தங்கிய லியோ ஜோசப் கருதினால் காடாயின்
(2)மேதகு டொன்சில்வெஸ்ரர்
(3)மேதகு பிராங் மார்க்கஸ்
(4)அதிமேதகு ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை

பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு30,31 ஆம் வினாக்களுக்கு விடைதருக

A-அமலமரித்தியாகிகள்

B-பிரான்சிஸ்கன் கன்னியர் சபை

C-டொமினிக்கன் சபை

D-அகுஸ்தீனார் சபை

30. போர்த்துகேயர் காலத்தில் இலங்கைக்கு வந்த மறை போதகர்கள்
(1)A,B (2)C,D (3)A,C (4)B,D

31. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு வந்த மறைபரப்பாளர்கள்
(1)A,B (2)A,C (3)A,D (4)B,C

32. கத்தோலிக்க திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய கிறிஸ்தவ சபைகளின் எண்ணிக்கை
(1)4 (2)5 (3)6 (4)7

33. 1995 ம் ஆண்டு திருவிவிலியத்தில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு
(1)தமிழ் பொதுமொழிபெயர்ப்பு (2)ஆங்கிலமொழிபெயர்ப்பு
(3)லத்தீன்மொழிபெயர்ப்பு (4)ஜேரமன் மொழிபெயர்ப்பு

34. திருத்தந்கை 6ம் பவுலின் "மிஸ் டேறியும் பிடேயி" எனும் சுற்று மடலின் பொருள்
(1)அன்னையும் ஆசிரியையும் (2)அவனியில் அமைதி
(3)விசுவாசத்தின் மறைபொருள் (3)தொழிலாளர் நிலமை

35. திருமுழுக்கு யோவானைப் போன்று நீதிக்காக குரல் கொடுத்து சாவை சந்தித்த குரு
(1)யக்கோமே கொன்சால்வேஸ் (2)அருட்பணி மேரி பஸ்ரியன்
(3)சுவாமி ஞானப்பிகாசம் அடிகள் (3)எச்.எஸ் தாவீது அடிகள்

36. இடையருக்குரிய வாழ்க்கை நடாத்திய இஸ்ரயேல் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக மாறியது எதன் மூலம்
(1)எகிப்திய அடிமைத்தனம் (2)கானான் நாட்டை அடைதல்
(3)சீனாய் உடன் படிக்கை (4)பெந்தகோஸ்தே

37. "மகளே துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று".இக்கூற்றுக்கு தொடர்புடையவர்
(1)பாவிப்பெண் (2)லாசரின் சகோதரி
(3)ஏழைக்கைம்பெண் (4)இரத்தப்போக்குடைய பெண்

38. இறையாட்சியை மையப்படுத்தும் உவமைகளின் சோடியாக அமைவது
(1)நல்ல சமாரியர், கடுகுவிதை (2)முத்து, புளிப்பு மா
(3)முத்து, காணாமல்போன மகன் (4)வலை, காணாமல்போன திராக்மா

39. இறையருள் ஈர்க்கப்படுகின்ற நொருங்கிய உள்ளத்தின் இயக்க நிலையாக அமைவது
(1)பயத்தினால் மனம் வருந்துதல் (2)சந்தர்ப்பத்துக்காக மனம் மாறுதல்
(3)உள்ளார்ந்த மனம் வருந்துதல் (4)நோயினால் மனம் மாறுதல்

40. உறுதி பூசுதலை வழங்கும் தகுதிபெற்ற பணியாளராக செயற்பட வேண்டியவர்
(1)மறை ஆயர் (2)மறைஆசிரியர்
(3)மறைமாவட்ட குரு (4)திருத்தொண்டர்

## பகுதி 2

முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக?

1. (1)திருமுகங்களின் வகைப்படுத்தல் இரண்டு தருக?
   (2)போர்த்துகேயரின் வருகைக்கு முன்னர் அநுராதபுரத்தில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான ஆதாரம் இரண்டு தருக?
   (3)பலி செலுத்துவதன் நோக்கம் இரண்டு தருக?
   (4)மிதமிஞ்சிய எதிர்நோக்கு என்பதில் அடங்கும் விடயங்கள் இரண்டு தருக?
   (5)திருச்சபையில் இருந்து பல கூறுகளாக பிரிந்த சபைகளின் பிரதான பகுதிகள் இரண்டு தருக?
   (6)எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பண்புகள் இரண்டு தருக?
   (7)ஏவாளிடமும்,காயீனிடமும், கடவுள் வினாவிய விடயம் இரண்டு தருக?
   (8)கபிரியேல் வானதூதர் செக்கரியாவிற்கு திருமுழுக்கு யோவானைப் பற்றி வெளிப்படுத்திய விடயங்கள் இரண்டு தருக?
   (9)மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டு தருக?
   (10)தியானத்தின் இரு முக்கிய விடயங்கள் இரண்டு தருக?

   (2x10=20 புள்ளிகள்)

2. (1)இயேசு செய்த புதுமைகளின் வகைகள் இரண்டு தருக?
   (2)இறையாட்சி நற்செய்தியின் ஆசிரியர், அடையாளம், காலத்தை தருக?
   (3) "ஆண்டவரின் ஆவி என்மேலே் உள்ளது ஏனெனில்….." என்றஇறைவார்த்தை பகுதியை மையப்படுத்தி கிறிஸ்தவ மாணவராகிய உமக்கு தரப்பட்டுள்ள பொறுப்புக்கள் ஐந்தினை விளக்குக?

   (2+3+5=10 புள்ளிகள்)

3. (1)திருப்பலியின் ஆரம்பத்தில் காணப்படும் மேன்மை மிகு அடையாளங்கள் இரண்டு தருக?
   (2)புதிய உடன்படிக்கையில் திருப்பலிக்கு குறிப்பிடப்படும் மூன்று பெயர்களை குறிப்பிடுக?
   (3)திருப்பலி வழிபாட்டை அர்த்தமுள்ளதாக்குவதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் ஐந்து குறிப்பிடுக?

   (2+3+5=10 புள்ளிகள்)

4. (1)பொதுக்குருத்துவத்தை பெற்ற கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்ட முப்பணிகளில் இரண்டை குறிப்பிடுக?
   (2)கத்தோலிக்க மாணவர் இயக்க செயல்முறையின் படிமுறைகள் மூன்று தருக?
   (3)இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் தலைவர் என்ற வகையில் உம்மை கருதி இளையோரின் வாழ்வை வளப்படுத்த நீர் முன்வைக்கும் செயற்றிட்டங்கள் ஐந்து குறிப்பிடுக?

   (2+3+5=10 புள்ளிகள்)

7. (1)தொடக்க திருச்சபையின் பண்புகள் இரண்டு தருக?
(2)கத்தோலிக்க திருச்சபையின் பண்புகள் மூன்று தருக?
(3)ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர்கள் முகங்கொடுத்த இன்னல்கள் ஐந்தை விபரிக்க?

(2+3+5=10 புள்ளிகள்)

8. (1)ஆன்மா சார்ந்த இரக்கச்செயல்கள் இரண்டு தருக?
(2)கிறிஸ்தவ அன்பிற்கு மாறுபட்ட எதிர்நிலைப்பண்புகள் மூன்று தருக?
(3)திருச்சபை கட்டளைகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புக்களில் இரண்டை தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக
(1) இறைவாக்கினர் எசாயா
(2) அருட்பணி.மைக்கல் றொடறிக்கோ அடிகள்
(3)இஸ்ரயேலரின் பாஸ்கா
(4)சூழலை பாதுகாப்போம்

(5+5=10 புள்ளிகள்)